கொச்சின் மொத்தபழ வியாபாரியின் வெற்றிக் கதை

**ஸ்ரீஅஸ்ரப்,**
**அஸ்ரப் புரூட்ஸ் சென்டர் (ஏ.எஃப்.சி),**
**பழமுகவர் 58/4520, ஜவு வீதி**
**எர்ணாகுளம், கொச்சின் - 682031.**
**தொலைபேசி: 0484-2351865, 2371770.**
**அலைபேசி: 09847034740.**



---

**எனது தொழில் குறிப்பு:**

என் பெயர் அஸ்ரப், 48 வயது, கேரளா மாநிலம் எர்ணாகுளம் சந்தையின் மொத்த பழவியாபாரி. நான் எனது உயர் நிலைப்பள்ளி படிப்பை முடித்தவுடன் தொழிலில் இறங்கினேன் கடந்த 30 வருடங்களாக நான் வியாபாரம் செய்து வருகிறேன். வேலை நாட்கள் திங்கள் முதல் சனி வரை. ஞாயிறு விடுமுறை நாள். எனது வியாபார நேரம் காலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை. இதில் முக்கியமாக அதிக பழம் வரும் நேரம் காலை 8 முதல் 10 மணி வரை கட்டமைப்பு வசதிகளான சாலை, பாதுகாப்புக்கான இடம், தகவல் தொடர்பு, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் வசதிகள் குளிர்பதன வசதியும் உள்ளது. நான் அனைத்து கேரளா பழ வியாபாரிகள் சங்கத்திலும் உறிப்பினராக உள்ளேன். கையாளப்படும் பழ வகைகளாவன திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, பிளம்ஸ், மொசம்பி, கமலாஆரஞ்சு, மா, பப்பாளி, அன்னாசி, மாதுளை, சப்போட்டா, ஸ்ட்ராபெர்ரி, தர்பூசணி, போன்றவை. எனது வாடிக்கையாளர்கள் சிறுவணிகர்கள், உணவு விடுதியாளர்கள் மற்றும் பொதுவான நுகர்வோர்கள்.

**தினசரி சந்தை நிலவரத்தின் (DMI) மூலமாக விசாலமான தகவல் கட்டமைப்பு வசதிகள்:**

எனக்கு தேவையான பொருட்களை கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரா பிரதேசங்களிலிருந்து பெருகின்றேன். எனது வியாபாரத்தில் இத்தனை வருடங்களாக தேவையான பொருட்களை இந்த மாநிலங்களிலுள்ள கமிஷன் ஏஜெண்ட் மற்றும் இடைத்தரகர்கள் மற்றும் பல்வேறு மையங்களிலிருந்து பெறுகின்றன. ஆனால், தற்பொழுது தினசரி சந்தை நிலவர இணையதளம் வந்த பிறகு எனக்கு விசாலமான தகவல் தொடர்புகள் உற்பத்தியாளர்களிடத்திலும் அதேபோல் வாங்குபவர்களிடத்திலும் ஏற்பட்டது. என்னால் பல்வேறு சந்தைகளின் விலை நிலவரங்களை அறிந்து கொள்ள முடிகிறது. தற்பொழுதைய நாட்களில் நான் முதன்மை உற்பத்தியாளர்கள் அல்லது விவசாயிகளிடமிருந்து பல்வேறு மாநிலங்களிலிருந்து அழைப்பினை பெறுகிறேன். அவர்கள் சரியான விலைக்கு பொருட்களை வழங்க தயாராக உள்ளார்கள். இதனால் பரஸ்பரம் லாபம் அடைகின்றார்கள். நானும் அவர்களும் லாபம் பெறுகிறோம். சில நேரங்களில் சில்லறை வியாபாரிகள் மற்றும் பொது மக்களும் நேரடியான வியாபாரத்திற்காக தொடர்பு கொள்கிறார்கள். சிறந்த தகவல் தொடர்புகள், மேலும் வேகமான பரிவர்த்தனை நேர சேமிப்பு, சிறப்பான சேவை மட்டுமல்லாமல் சிறந்த விலையை பெறுவதால் தினசரி சந்தை நிலவரத்திற்கு (DMI) நன்றி.